பக்கங்கள்: ஆறு

5-1991

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்:6 பிரமோதூதஹூ மாசி மீ 26 உ ஞாயிற்றுக்கிழமை (10-03-1991) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:103

# சந்திரசேகரின் ஆட்சி தப்புவதற்கு வாய்ப்பு!

## இந்திய அரசியலில் புதிய திருப்பம்

புதுடில்லி, மார்ச் 10

சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் (எஸ்) அரசாங்கம் தப்பிப் பிழைக்கும் வாய்ப்பு உருவாகி வருவதாக அறியவருகிறது.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தப் புதிய திருப்பம் தோன்றியுள்ளது.

பிரதமர் சந்திரசேகருக்கும், இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கசப்புணர்வை நீக்கி நல்லுறவை ஏற்படுத்தவும் —

இதன்மூலம் பிரதமர் சந்திரசேகரைத் தொடர்ந்து ஆட்சியில் இருக்கச் செய்யவும் புதுடில்லியில் திரைமறைவில் நேற்று முதல் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

தமது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி திரு. வெங்கட்ராமனிடம் கடந்த புதன் கிழமையன்று ஒப்படைத்த பின்னர் நேற்று முதல் நட

[2ஆம் பக்கம் பார்க்க]

## வன்னியில் மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி கடந்த வெள்ளியன்று வன்னிப் பிராந்தியத்தில் பல்வேறு எழுச்சி நிகழ்ச்சிகள் மாவட்ட ரீதியில் நடைபெற்றன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவினால் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

[உ]

### விமானக் குண்டு வீச்சினால்

## சேதமான பாடசாலைகள் பற்றி செஞ்சிலுவை கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அண்மைக் காலங்களில் பாடசாலைகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சு அனர்த்தங்கள் பற்றி யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளை தனது தலைமையகத்துக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கிறது.

குண்டு வீச்சுக்கு இலக்கான பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் இருப்பதை சுட்டிக்

[2ஆம் பக்கம் பார்க்க]

## வீமன்காமம், கட்டுவனில் நேற்று மோதல் சம்பவங்கள்

காங்கேசன்துறை, மார்ச் 10

கட்டுவன், வீமன்காமம் பகுதிகளில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மோதல்கள் இடம்பெற்றன.

இப்பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் ஹெலி தாக்குதல்களுடன் வெளியேற முயன்றனர் என்றும் அப்போதே அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கட்டுவன், ஏழாலை, மல்லாகம் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [ஒ-68]

### ஊர்காவற்றுறை, காரைநகர்

## படை முகாம்களிலிருந்து கடும் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 10

நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் ஊர்காவற்றுறை, காரைநகர் படைமுகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

வெள்ளி இரவு 8 மணிக்கு ஊர்காவற்றுறை முகாமிலிருந்து கின்னமூளாய்ப் பகுதியை நோக்கி

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தாண்டிக்குளத்திலும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

நண்பகல் 11 30 மணி முதல் 12.30 மணி வரை மரக்காரம்பளை, புது வீதி பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

பிற்பகல் 2.30 மணி முதல் மாலை நான்கு

[2 ஆம் பக்கம் பார்க்க]

### விசேட ஜி. சி. ஈ. (உ.த) பரீட்சை:

## கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு கிழக்கில் ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் விசேட ஜி. சி. ஈ. [உயர்தர] பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைத் தத்தமது பகுதி பிராந்திய கல்விப் பணிப்பாளர்களிடம் நேரில் ஒப்படைக்க வேண்டும் அல்லது நேரடியாக பரீட்சைத் திணைக்களத்துக்கு அதனை அனுப்பலாம்.

—இவ்வாறு பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல பத்திரிகை விளம்பரம் மூலம் அறிவித்திருக்கிறார்.

முன்னர் 1990 ஆகஸ்ட் பரீட்சைக்கு விண்ணப்பித்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## லொறி மீது இளைஞர் பலி!

## ஹெலி சூடு; 3பேர் காயம்!!

மட்டக்களப்பு மாவட்டம் தும்பன் கேணியில் கடந்த வியாழன் பிற்பகல் 11.45 மணியளவில் நெல் ஏற்றி வந்த லொறி ஒன்றின் மீது ஹெலி கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தது.

இச்சம்பவத்தில் லொறியின் உதவியாளர் [கிளீனர்] சி.அமரசிங்கம் [30 வயது] உயிரிழந்தார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர்,

[2 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



இப்ப ஓடவிட்டுப் போட்டு பிறகு காலம் கனியும் போது காலை வாருவம் எண்டு பிளான் போடுறார் போல...

### தாண்டிக்குளத்தில் நேற்று

## புளொட் உறுப்பினர் மூவர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 8

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ காவல் அரணிலிருந்து நேற்றுக்காலை 10.45 மணியளவில் வெளியேறி சுமார் 300 யார் தூரம் வரை வந்த புளொட் இயக்கத்தவர் மூன்று பேர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அவர்களிடமிருந்து ரீ 81 ரகத் துப்பாக்கி - 1, மகவின் ரகத் துப்பாக்கி - 85 -4, ஐ. எம் ரைவகன் - 85 ஆகியவை தங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதவி உயர்வுக்கான பரீட்சைகள் இப்போது நடக்கும் சாத்தியமில்லை

கொழும்பு, மார்ச் 10

இரண்டாம், மூன்றாம் தரங்களில் உள்ள தமிழ் அதிபர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இப்போது நடைபெறும் சாத்தியம் இல்லை என்று அறியவருகிறது.

சேவையில் உள்ள இரண்டாம் மூன்றாம் தர அதிபர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் பெப்ரவரி 26 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 8 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெற்றன.

தமிழ் அதிபர்கள் வடக்கு-கிழக்கில் இருந்து கொழும்பு வருவது கஷ்டமானபடியால் அப்பகுதிகளிலேயே நேர்முகப் பரீட்சையை நடத்துமாறு தொழிற்சங்கத்தினரும் தமிழ் எம். பிக்கள் சிலரும் கல்விப் பகுதியினரை வலியுறுத்தி இருந்தனர்.

நேர்முகப் பரீட்சைக் குழுவில் இரண்டு சிங்கள அதிகாரிகள், இரண்டு தமிழ் அதிகாரிகள், ஒரு முஸ்லிம் அதிகாரி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

நேர்முகப் பரீட்சை நடத்தும் பொருட்டு இக்குழுவினர் வடக்கு- கிழக்கு செல்வது சாத்தியமில்லை என்றும்—

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த அதிபர்களுக்கான பரீட்சைகளையும் கொழும்பிலேயே நடத்த வேண்டி உள்ளதாகவும்—

கல்விஅமைச்சர் திரு. லலித்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உள்நாட்டுக் கலவரங்களில் 30 ஆயிரம் ஈராக்கியர் பலி!

ஈராக்கின் தெற்குப் பகுதியில் கடந்த எழு தினங்களாக இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கு அதிகமாகும் என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

## காரணமின்றி ஈழத்தமிழர் தமிழகத்தில் கைது!

சென்னை மார்ச் 10

தி.மு.க. அரசைக் கலைத்தது சரி என்று நியாயப்படுத்து முகமாகவே இலங்கைத் தமிழ் அகதிகளை பொலீஸார் காரணமின்றி கைது செய்து வருகிறார்கள்.

—இப்படி முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## ரஷ்யாவின் ஐக்கியத்தை பாதுகாக்க புதிய திட்டம்

மாஸ்கோ, மார்ச் 10

சோவியத் யூனியன் பிளவு படுவதைத் தவிர்க்குமுகமாக புதிய யூனியன் ஒப்பந்தம் [Union Treaty] ஒன்றை ஜனாதிபதி கோர்பச்சேவ் வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் நகல், பதினைந்து மாநிலக் குடியரசுகளுக்கும் அங்கிகாரத்திற்காக திரு. கோர்பச்சேவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நகல் ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு;

★ ஒவ்வொரு மாநிலக் குடியரசின் இறைமையும் பேணப்படும். மனிதஉரிமை பேணலுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

★ மாநிலக் குடியரசுகள் சொந்த முறையில் வெளிநாடுகளுடன் ராஜதந்திர உறவுகளை வைத்துக் கொள்ளும் சுதந்திரம் வழங்கப்படும்.

★ சர்வதேச நிறுவனங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளும் உரிமைகளையும் மாநிலக் குடியரசுகள் பெறும்,

★ மாநிலங்களின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்ந்து மத்திய அரசிடமே இருக்கும்.

★ குறிப்பிட்ட சில நிலைமைகளில் பிரிந்து போகும் உரிமைகளையும் மாநிலக் குடியரசுகள் பெறும். [உ-எ]

## சந்திரசேகரின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வையாக பிரதமர் சந்திரசேகர் ராஜீவ் காந்தியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து பிரதமர் சந்திரசேகரின் அமைச்சரவையில் இருக்கும் நீதி அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சந்திரசேகரின் நெருங்கிய சகாவான குஜராத் முதல்வர் சிமன் பாய் பட்டேல் ஆகியோர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து மேலும் பேச்சு நடத்துவதற்காக அவரது இல்லத்திற்கு விரைந்தனர்.

பேச்சுகள் நீண்ட நேரம் நடைபெற்றன.

உத்தரப் பிரதேச முதல்வரும் சந்திரசேகரின் கட்சியைச் சேர்ந்தவருமான முலாயம்சிங் யாதவ்வும் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதன் பின்னர் தகவல் வெளியிட்ட அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி, சந்திரசேகரின் ஜனதா தள் கட்சியும் இந்திரா காங்கிரஸ் கட்சியும் மீண்டும் இணைந்து அரசு நடத்தும் சூழ்நிலை ஏற்படும் என்றும் தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

திரு. சந்திரசேகர் ராஜினாமாச் செய்தது ஒருதலைப் பட்சமானது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன். சந்திரசேகர் அரசுக்கு எனது கட்சியின் ஆதரவு இன்னமும் இருக்கிறது. சந்திரசேகர் அரசைக் கவிழ்க்கும் எண்ணமேதும் எனது கட்சிக்குக் கிடையாது — என்று திரு. ராஜீவ்காந்தி தெரிவித்தார்.

''இடைக்காலப் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல. என்றாலும் வேறு வழி இல்லாததால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி சிபாரிசு செய்ய வேண்டிய நிலைக்கு நான் தள்ளப்பட்டேன்'' — என்றார் பிரதமர் சந்திரசேகர்.

இடைக்காலப் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதைத் தாங்களும் எதிர்ப்பதாக துணைப் பிரதமர் தேவிலாலும், அவரது மகனும் சந்திரசேகரின் கட்சிப் பொதுச் செயலாளருமான ஓம் பிரகாஷ் சௌதாலாவும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை—

''நாடாளுமன்றத்தைக் கலைத்து இடைக்காலப் பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட ஜனாதிபதி வெங்கடராமன் தவறுவாரேயானால் தேசிய முன்னணி எம். பிக்கள் அனைவரும் கூண்டோடு தமது எம். பி. பதவிகளை ராஜினாமாச் செய்வார்கள்'' — என்று முன்னாள் பிரதமர் வி. பி.சிங் நேற்று எச்சரிக்கை விடுத்தார். [உ-எ]

## சேதமான பாடசாலை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

காட்டி அவற்றை உடனடியாகவும். நீண்டகால அடிப்படையிலும் புனரமைப்புச் செய்ய புனர்வாழ்வு அமைச்சை வற்புறுத்துமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலால் பாடசாலைக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்களும், தற்போது அந்தப் பாடசாலை இயங்க முடியாத நிலையில் இருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [ஒ-5]

## கல்வி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர்கள் தற்போது இடம் மாறியிருந்தால் அல்லது விண்ணப்பித்த நகரத்தை மாற்றி பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் அதுபற்றி பரீட்சை ஆணையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கவேண்டும் என்றும்—

அது சம்பந்தமான கடித உறையில் ''ஜி சீ ஈ [உ.தர] விசேட பரீட்சை - 1990, நகர மாற்றம்'' என்று குறிப்பிட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் இந்த விடயம் பற்றிய அரசாங்க அறிவித்தலின் பிரதியை ''உதயன்'' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

[முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்] [உ]

## படை முகாம்....

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏழு ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

பின்னர் நள்ளிரவு 12. 30 மணியளவில் காரைநகர் தோப்புக்காடு காவல் அரணிலிருந்து நீலன்காடு பகுதிகளை நோக்கி முப்பதுக்கும் அதிகமான ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

சீ-நோர் காவல் அரணிலிருந்தும் குடிமனைகளை நோக்கி ஷெல்கள் ஏவி விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## தாண்டிக்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மணி வரை தாண்டிக்குளம், பூந்தோட்டம் காவல் அரண்களிலிருந்து சாஸ்திரி கூழாங்குளம் காட்டுப் பகுதியை நோக்கி இருபதுக்கும் அதிகமான ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

பின்னர் மீண்டும் வெள்ளி இரவு 8.30 மணி முதல் 11.30 மணி வரை தாண்டிக்குளம் முகாமிலிருந்து அதனை அண்டிய காட்டுப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [உ]

## லொறி மீது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெரியகல்லாறைச்சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது

ஹெலி சூட்டுக்கு இன்னும் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் விவரம் வருமாறு:-

திலகரட்ணம் உதயகுமார் [28 வயது] - 39ஆம் கிராமம், மதியாணன் சின்னவன் [29 வயது] - 39 ஆம் கிராமம், கந்தையா சசிகுமார் [12 ...

## மரண அறிவித்தல்

### திருமதி யோகமணி யோகேந்திரன்

[யா / அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியை]

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி யோகமணி யோகேந்திரன் 4-03-91 திங்கள் காலமாகி விட்டார். அன்னார் நி. யோகேந்திரனின் அன்பு மனைவியும், வ. சின்னையா, சி. தெய்வநாயகி தம்பதிகளின் புதல்வியும், குகதாசன், குகதர்ஷன், பாரதி ஆகியோரின் அன்புத்தாயாரும் மனோன்மணி [ஆசிரியை தி/ ஸ்ரீ சண்முக வித்தியாலயம்] இரத்தினவடிவேல் [சவூதி அரேபியா] புனிதமணி, ஞானமணி [ஆசிரியை, வல்வை சிவகுரு வித்தியாசாலை], சாரதாமணி [ஆசிரியை யா / வேலாயுதம் மகா வித்தியாலயம்] ஆகியோரின் சகோதரியும், ஜெயகுமாரன். தயாளினி ஆகியோரின் மைத்துனியும், தாட்சாயினி, மயூரேசன், ஜெயதாரணி ஆகியோரின் சிறிய தாயாரும், பூங்கோதை, திருக்குமரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 5 - 3 - 91 செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
நி. யோகேந்திரம்

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.

[[15904]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்

ஈராக் தலைநகர் பஸ்ராவில் வைத்து காணாமற்போன 40க்கும் மேற்பட்ட மேற்குநாட்டுப் பத்திரிகையாளர்கள் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். பஸ்ராவில் இராணுவ முகாம் ஒன்றில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது விசாரணையின்போது தெரியவந்தது.

# அரபு நேச நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி

வளைகுடாவில் உள்ள நேச அரபு நாடுகளுக்கு ஆயிரத்து 800 கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை இஸ்ரவேலுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

# மேஜர் நிராகரிப்பு

லண்டன், மார்ச் 10

இடைத்தேர்தல் ஒன்றில் ஆளும் கன்சர் வேட்டிவ் கட்சி தோற்றது பற்றிய கண்டனங்களை பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் நிராகரித்து விட்டார்.

அரசு செல்வாக்கு இழந்து விட்டது என்பதை இத்தோல்வி வெளிப்படுத்தியுள்ளது என்று கூறப்படுவது தவறு என்றும் அடுத்த தேர்தலில், இழந்த இத்தொகுதியில் தமது கட்சி வெற்றியீட்டும் என்றும் திரு. மேஜர் நம்பிக்கை தெரிவித்தார்.

[இ-எ]

# பென்ஜோன்ஸனுக்கு நான்காவது இடம்

மாட்ரிட், மார்ச் 10

ஸ்பெயின் நகர் ஒன்றில் நடந்த 60மீற்றர் ஓட்டப் போட்டியில் பென்ஜோன்ஸன் 4ஆவது இடத்தையே பெற்றார். முதல் மூன்று இடங்களையும் முறையே அமெரிக்கா, ஸ்பெயின், பிரிட்டிஷ் நாடுகளின் வீரர்கள் பெற்றனர்.

கடைசியாக நடந்த ஒலிம்பிக்போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் பென்ஜோன்ஸன் முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றிருந்தார். போதைவஸ்துவை பாவித்து விட்டு போட்டியில் கலந்து கொண்டது நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு வழங்கப்பட்ட தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது தெரிந்ததே.

# தொடர்ந்து கடமையாற்ற சந்திரசேகருக்கு பணிப்பு

புதுடில்லி, மார்ச். 10

பிரதமராகவும் அமைச்சரவைத் தலைவராகவும், உத்தியோக, மற்றும் நாடாளுமன்றக் கடமைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்படி திரு. சந்திரசேகரை ஜனாதிபதி வெங்கடராமன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக திரு. சந்திரசேகருக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார்.

சட்ட அறிஞர்களுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர் தாம் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும் ஜனாதிபதி தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதே வேளை— லோகசபையைக் கலைப்பது பற்றிய இழுபறி நிலை நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-எ]

# நெல்லுக்குப் பதிலாக அரிசி கொள்வனவு

கொழும்பு, மார்ச் 10

நெல்லாகக் கொள்வனவு செய்வதற்கு பதிலாக அரிசியாகவே விவசாயிகளிடமிருந்து அரசு கொள்வனவு செய்யும் என்று விவசாயத்துறை அமைச்சர் விஜேரத்ன பண்டா தெரிவித்தார்.

அரிசியை அரசு கொள்வனவு செய்யும் விலை, விற்கும் விலை பற்றிய விவரங்களையும் அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

கிலோ கணக்கில் கொள்வனவு விலை:- வெள்ளை 10-50 சிவப்பு - 11-00, புழுங்கல் - 11-50, சம்பா - 13-50

விற்பனை விலை:- வெள்ளை - 11-00, சிவப்பு- 11-50, புழுங்கல்- 14-00, சம்பா- 16-00.

# உணவுப் பொதிகளைத் தூக்கும் நாய்கள்

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. வார்ட் அலுமாரிகளில் வைக்கப்படும் உணவுப்பொதிகளையும் நாய்கள் தூக்கிச் செல்கிறன என்று கூறப்படுகிறது.

[இ-117]

# ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, மார்ச் 10

வெள்ளி அதிகாலை ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கித் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

[இ-117]

# 2 கிராமங்கள் அபிவிருத்தி

அராலி, மார்ச் 10

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வசதி குறைந்த கிராமங்களான அராலி மேற்கு, பொன்னாலை ஆகியவை அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

கிராமசேவை அலுவலர்கள் மூலம் அக்கிராமங்கள் தொடர்பான சகல விவரங்களையும் உதவி அரச அதிபர் திரட்டியுள்ளார்.

[இ-13]

# அறிவியல் கருத்தரங்கு

குருநகர், மார்ச் 10

யாழ். மாவட்டத்தில் இருக்கும் 856 சனசமூக நிலையங்களிலும் காலையில் அறிவியல் கருத்தரங்குகளும், மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கின்றன.

மாதத்தில் ஒருநாள் பௌர்ணமி தினத்தில் இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்துமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா கேட்டுக் கொண்டுள்ளார். [இ - 51]

# கடைகளில் திருட்டு

காங்கேசன்துறை, மார்ச் 10

மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் மானிப்பாய் வீதியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மருதனார்மடம் சந்தியில் இதற்கு முன்னரும் இரு கடைகளில் திருட்டுக்கள் இடம் பெற்றன.

[இ - 68]

# குறைந்த விலையில் பொருள்கள்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சில அத்தியாவசியப் பொருள்களை நிர்ணய விலையிலும் பார்க்க குறைந்த விலையில் டங்கிடு அட்டைக்கு வழங்குகிறது.

ஒரு கிலோ சீனி ரூபா 36-00 ஆகவும், மலலி ரூபா 45-00 ஆகவும், தேங்காய் எண்ணெய் ஒருபோத்தல் ரூபா 28-00 ஆகவும் விற்பனை செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது.

[இ-117]

# உதயன்

## உற்பத்திக்கு உதவ...

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளூரில் விளைவிக்கப்படும் சிறுதானியங்களை அதிக அளவில் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்த முயற்சி வரவேற்கத் தக்கதாகும்.

உணவுப் பொருள்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும் நல்ல போக்கு ஒன்று இப்போது வளர்ந்து வருகிறது. அதனால் மக்களுக்குப் பிரதானமான தேவைப்படும், இங்கு உற்பத்தி செய்யக்கூடிய உணவு வகைகளைப் பயிரிடுவதில் விவசாயிகளும் ஏனைய பொதுமக்களும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இது மகிழ்ச்சி தருவதாகும்.

இந்த ஆர்வமும் அக்கறையும் குன்றாமல் இருக்க வேண்டுமானால், உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு எப்போதும் போதிய சந்தை வாய்ப்பும், நியாய விலையும் கிடைக்க வேண்டும். விவசாயத்தில், பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் நஷ்டமடையாமல், அவர்கள் நல்கிய உழைப்புக்கு ஏற்ற லாபமேனும் கிடைப்பது அவசியம். அப்போதுதான், இப்போது ஆரம்பித்துள்ள அதே வேகத்துடன் உணவு உற்பத்தியை மேலும் முன்னெடுத்துச் செல்ல முடியும். நிரந்தரமானது ஆக்கவும் இயலும்.

அவ்வாறு ஒரு நிரந்தர நிலையை உண்டுபண்ணுவதற்கு, விவசாயிகள் பயிரிடும் உணவுப்பொருள்களை, தடங்கல் இன்றி, தேக்கம் அடையாமல், வீணே பழுதடையாமல் கொள்வனவு செய்யவும் சந்தைப்படுத்தவும் வசதிகள் செய்யப்படுதல் அவசியம்.

ஒழுங்கு சீரான கொள்வனவு முறைகள் இல்லாவிடில் உற்பத்தியாளரும், பாவனையாளரும் பாதிக்கப்பட, நடுவில் இருக்கும் தரகர்கள் நயமடைவதே நடைமுறை. இப்போதைய சூழ்நிலையில் அதனை அனுமதிக்க முடியாது; அனுமதிக்கவும் கூடாது.

எனவே உள்ளூர் உற்பத்தியில் பொருள்களை கொள்வனவு சந்தைப்படுத்தல் என்பன நிறுவனமயமாக்கப்பட வேண்டும். மக்களின் — உற்பத்தியாளரினதும், பாவனையாளரினதும் — நலன்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன், உண்மையான இலட்சியத்துடன் கொள்வனவும் சந்தைப்படுத்தலும் அமைவது மிகப் பிரதானமானது.

ஆனால் ஊழல், மோசடி, பாரபட்சம் ஆகிய மூன்றும் அங்கு ஊடுருவி விடாமல் பார்த்துக் கொள்வதிலேயே வெற்றி தங்கி உள்ளது என்பதை மறந்துவிடலாகாது. கொள்வனவும், சந்தைப்படுத்தலும் தோல்வி கண்டுவிட்டால் உற்பத்தியை ஸ்திரப்படுத்துவது கடினத்திலும் கடினம்.

# நெல் உற்பத்தி புள்ளிவிவர மதிப்பீட்டு வேலை தாமதம்

## செயலக புள்ளிவிவரக் கிளையில் பலர் ஓய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டுக்கான நெல் உற்பத்தி பற்றிய மதிப்பீடு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அடுத்துவரும் பெரும்போக சாலபகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய நெல் உற்பத்தி பற்றித் திட்டமிடுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் இந்த நெல் உற்பத்தி பற்றிய மதிப்பீட்டை விவசாய, கமநல சேவைத் திணைக்களங்களின் உதவியுடன் யாழ் செயலக புள்ளி விவரக் கிளையினர் மேற்கொண்டு வருவது வழக்கம்.

ஆனால் செயலக புள்ளி விவரக் கிளையில் கடமையாற்றிய புள்ளிவிவர ஆய்வாளர்களில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் ஓய்வு பெற்றுள்ளதால் இந்த முறை புள்ளிவிவர மதிப்பீட்டு வேலைகளை செவ்வனே செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்போக நெல் அறுவடை தற்போது முடிவடைந்துவிட்ட நிலையில் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகளை சென்று சந்தித்து ஒரு உத்தேச மதிப்பீட்டையாவது இம்முறை மேற்கொள்ளவுள்ளதாகவும் — அதற்குப் போக்குவரத்து வசதியின்மை பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் மாவட்ட புள்ளி விவர உத்தியோகத்தர் தெரிவித்தார்.

1987 88 ஆண்டு காலப் பகுதியில் இந்திய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ் மாவட்டத்தில் நெல் உற்பத்தி பற்றிய மதிப்பீடு செய்யப்படாததும், அதனால் அடுத்து வந்த பெரும்போக நெல் உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.

[இ-5-50]

# உத்தரவாத விலை அதிகரிப்பு

நெல்லின் உத்தரவாத விலையை அரசு ஒரு புசலுக்கு 26 ரூபாவினால் அதிகரித்து உள்ளது.

ஒரு புசல் நெல்லை அரசாங்கம் இனிமேல் 136 ரூபா வீதம் கொள்வனவு செய்யும் என்று அமைச்சர் விஜேரத்ன பண்டா வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இதுவரை காலமும் ஒரு புசல் நெல் 110 ரூபா வீதமே அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு வந்தது.

விலை அதிகரிப்பு உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஒரு கிலோ நெல்லின் கொள்வனவு விலை 6 ரூபா 51 சதமாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ-எ]

# குழந்தைகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச் 10

5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தொற்று நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணி தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கிய பின்னர் போதியளவு தடுப்பூசி இல்லாததால் நீண்டகாலம் இப்பணி நிறுத்தப்பட்டிருந்தது.

[இ-72-18]

# பதுங்குகுழிகள் பலரை காப்பாற்றின

[முந்திய தொடர்ச்சி]

அங்கு சென்ற போது, ''பாடசாலையா இது?'' என்ற கேள்வி மனதில் எழுந்தது. சிரழிந்த தோற்றத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அந்தப் பாடசாலையின் பெரிய கட்டடமொன்றின் மீது வை-12 விமானத்தில் இருந்து குண்டு போட்டதில் அந்தக் கட்டடத்தின் முழுப் பகுதியுமே தரைமட்டமாகியிருந்தது! அதன் அருகே சுமார் 15 அடி ஆழம் வரையிலான பெரிய குழி காணப்பட்டது. அதில் இருந்து பெருத்த விசையுடன் அள்ளி வீசப்பட்ட கற்களும், மண் துணிக்கைகளும், 25 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள

**வல்லைப் புயல்**

பகுதி: பதினொன்று.

மற்றைய கட்டடத்தின் கூரைகளின் மேல் மூடிக் கிடந்தன.

இன்னுமொரு பெற்றோல் எரிகுண்டு, அதற்கு எதிர்ப்புறமுள்ள ஒரு கட்டடத்தினுள் விழுந்து, அது முற்றாகவே எரிந்து சாம்பராகக் கிடந்தது.

''இவ்வளவு குண்டுகளும் பாருங்கோ... பள்ளிக்கூடம் என்று தெரிந்துதான் போட்டிருக்கிறார்கள்... இந்தப் பக்கத்தில் மட்டும் பதினொரு குண்டுகள் வரை போட்டிருப்பாங்கள். உந்தக் குண்டுக்கு நாங்கள் பயந்து நாட்டை விட்டு ஓடுவம் என்று எண்ணிவிட்டானோ?... ஆனால் எங்கடை பெடியள் மட்டும் உசாராக இருக்கவேணும்...''

இவ்வாறு திருமதி தேசோமயானந்தம் புஸ்பகாந்தியம்மா என்பவர் கூறினார்.

அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு, சிவகுருவித்திய லய வீதியினூடாகச் சென்றேன்.

''ஐயாமாரே!... என்ரை வீட்டையும் ஒருக்கால் பாருங்கோவன்...''

வாசலில் குந்தி இருந்த ஒரு வயதான மூதாட்டி எங்களைக் கண்டதும் கைகளைக் கும்பிட்டபடி அழைத்தார்.

அவ்வேளை என்னுடன் நண்பர் பொன். பூலோகசிங்கமும் நின்றார்.

''ஆச்சி!... நாங்கள் சுற்றோரிலை இருந்துவரேல்லை. சுமா பார்க்கத் தான் வந்தனாங்கள்...'' நான் சிரித்துக் கொண்டே அவருடைய வீட்டிற்குள் கால் வைத்தேன்.

''பரவாயில்லை... உள்ளை வந்து பாருங்கோ...'' அந்த அம்மாள், எங்களை வலிந்து உள்ளே அழைத்துச் சென்றார். உண்மையிலேயே அந்த வீடு பாதிக்கப்பட்டுத் தான் இருந்தது. கூரையில் உள்ள பல ஓடுகள் உடைந்தும், சுவர்கள் உடைந்தும் இருந்தன!

''இதெல்லாம் புலிகளாலை தானே வந்தது?'' எனக்கு அருகில் நின்ற பொன். பூலோகசிங்கம் சிரித்துக் கொண்டே கேட்டார்.

**மூதாட்டியின் அர்த்தமான கதை**

உதென்ன கதை?... அவங்கள் பெடியளோடை நேருக்கு நேரை சண்டைபிடிக்க முடியேல்லை... இந்த விழுவான மேலாலை வந்தெல்லே எங்களுக்குக் குண்டு போடுறான், எங்கடை ஆக்களும் வெளிநாட்டிலை இருந்து வீடு கட்ட, கடைபோட என்டு பெருவாரியா அனுப்புற காசைப் பொடியங்களட்டைக் கொடுத்தா என்ன? அதுகள் பிளேன் சுடுகிற மெசின் வாங்கி இவங்களைப் பறக்கப் பறக்க அடிப்பாங்கள்...

அந்த வயதான பெண் வேடிக்கையாக இதைச் சொன்னாலும், அந்த வார்த்தைகள் எவ்வளவு அர்த்த புஷ்டியானவை என்பதை

வல்வை

ந. அனந்தராஜ்

நினைத்துப் பார்த்தேன்.

எமது இளைஞர்கள் நெற்றி வியர்வை சிந்தி, தமது உதிரத்தையே அர்ப்பணித்து அன்னிய நாடுகளில் உழைக்கும் பணத்தை மீண்டும் மீண்டும் வீடுகள், கட்டடங்களைக் கட்டுவதற்காக அனுப்பிக்கொண்டிருக்கின்றபோது, அவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

கருவாட்டுக்கு தேவையான அரைத்த உப்பு எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ சயிமில், 76[222] ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [16062]

### மங்கலாம விற்பனை

பழைய புத்தகங்கள், கொப்பி பேப்பர், போத்தல், பித்தளை, செம்பு ஈயமேந்து, கேம்பி தீன், செம்பு ருப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிர சா Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் லேன். யாழ்ப்பாணம். [16045]

### தேவை

திப்புரவான வெற்றுப் போத்தல்கள் தேவை தொடர்பு: மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி 5833]

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) தேவை. முன் அனுபவம், தகைமைகளுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: 188, மே/பா உதயன். [சி/5824]

### தையல்காரர்கள் தேவை

ஆண்களின் உடைகளை சிறந்த முறையில் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஆண் அல்லது பெண் தையல்காரர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். விக்ரம் டெயிலரிங் மார்ட், 208/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [சி 5911]

### மணமகள் தேவை

பிரித்தானிய அரசாங்கத்தில் 15 வருட வேலை செய்கிறதும், தம்பதி இருதியில் இலண்டனில் ஒரு வீடுடைய மன்னார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கத்தோலிக்க [R C] 5' 4" 39 வயதுடைய ஆனால் பல வருட இளமைத் தோற்றமுடைய சகோதரனுக்கு ஆங்கிலம் பேசத்தக்க பண்புள்ள மணமகளைத் தேடுகிறோம். வரும் புகைப்படம் விவரங்கள் சகலவற்றுடனும் விண்ணப்பிக்கவும் பெ.பெ. 130, உதயன், யாழ்ப்பாணம். [16088]

ஓட்டுக்கு சொந்தத்தில் ஆபரணங்கள் செய்து கொடுக்கும் 37 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. திருவிளம்பம், 16/16 வண்ணைபுரம். புதிய மங்கல்யா மரீஜ் சேர்விஸ், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [16085]

### நோவு வைத்தியம்

நட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணெய் எஸ்ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [16014]

### அய்யனார் திருமண சேவை

உங்கள் சாதகங்களை ஆராய்ந்து தரிப்பை செரிலோ அல்லது கடித மூலமாகவோ அனுப்பி வைக்கவும். சிறந்த முறையில் குறுகிய காலத்தில் திருமணம் ஒழுங்குகள் செய்து தரப்படும். சின்னசாமிக்குருக்கள் சண்முகம் வீ மாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [15902]

### புளொக் புகைப்படம்

புளொக் [Block] புகைப்படம் - பெர்சிய - கலர் படம் - ஓவியம் - பிரேம் போடுதல் - கலர் பிலிம் சுருள்கள் - ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம் [சி-5814]

### வகுப்புகள்

உயர்தர 1990, 1991 பரீட்சைகளுக்கான தூய, பிரயோகக் கணித மீட்டல் வினாவிடை கலந்து ஆராய்தல் சிறு குழுக்களாக ஆர்வமுள்ள மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்படும். விவரங்களுக்கு: ஆ. இராசசிங்கம், 83 [4-4], நாவலர் வீதி யாழ்ப்பாணம். [16076]

### கல்வி

G C E. [O/L] இல் சட்டாய பட்டம் இல் கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு 20 மணித்தியாலயத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். அத்துடன் ஆண்டு 5 லிருந்து ஆண்டு 11 வரைக்கும் கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து ஆண்டு 11 வரைக்கும் விசேட சித்திக்கு கற்பிப்பதற்கும் பயிற்சி அளிக்கப்படும். ஆறுமுக நாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பலே கோசுநீர் வீதி சுண்டிக்குளி. [16073]

### தவறிவிட்டது

நல்லையா ஆனந்தம்மாவின் அடையாள அட்டை இல. 57264380 V மருதடி பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ந. ஆனந்தமோகன் சுதுமலை மத்தி மானிப்பாய் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [15901]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள்: "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை [ஞாயிறு விடுமுறை] [16037]


# சம்பள முற்பணக் கடன்: பட்டதாரி ஆசிரியர் சிரமம்

அச்சுவேலி, மார்ச் 10

இரண்டு வருடச் சம்பளப் பற்பணக் கடன் முழுதாக வழங்கப்படாதிருப்பதில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பிரத்தியேகமான நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இதனால் கடன் கோரி விண்ணப்பித்த பட்டதாரி ஆசிரியர்கள் பலர் கடன் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் கடன் விண்ணப்பத்துக்கு பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குறுகிய கால அவகாசத்தில் கடனும் வழங்கப்படுகிறது.

ஆனால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டடப் பொருள்கள் தொடர்பான சேதத்துக்கு "கட்டடத் திணைக்களப் பொறியியலாளரின் சேத மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

1988 ஆம் ஆண்டுக்கு முன்பு ஏற்பட்ட சேதத்துக்கு கட்டடத் திணைக்கள பொறியியலாளரின் மதிப்பீட்டு அறிக்கை பெறுவது எப்படி? என சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அங்கலாய்க்கின்றனர். [இ-11]

# பாடப்புத்தகம் எதிலும் எழுத்து சீர்திருத்தம் இல்லை

அச்சுவேலி, மார்ச் 10

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கல்வி அமைச்சின் இலவசப் பாடப்புத்தகங்களில் இதுவரை இடம்பெறவில்லை.

இதனால் ஆரம்ப வகுப்பு மாணவர்களும் - ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் பதின்மூன்று தமிழ் எழுத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டு புதிய வடிவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தி இருக்கிறது.

ஆனால் 1991 ஆம் ஆண்டுக்கான விநியோகத்திற்காக யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்கள் எதிலும் எழுத்துச் சீர்திருத்தங்களைக் காண முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1991 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான புத்தகங்களில் கூட எழுத்துச் சீர்திருத்தம் இடம்பெறவில்லை. [இ-11]


## கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 11-03-1991 9 00 a.m.

திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்.

16 03-1991 9-00 a.m.

சனி, ஞாயிறு வகுப்புகள்

O / L படித்த இருபாலாரும் சேரலாம்

தமிழ்ப் பிரதேச மாணவர்களின் நன்மை கருதி தமிழில் விளக்கங்கள் அளிக்கப்படும்
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
தமிழ்ப் பிரதேசத்தில் தனித்துவம் மிக்க

கம்பியூட்டர் கல்வி நிறுவனம்

மேலதிக விபரங்களுக்கு:




UNIKCO COMPUTER CENTRE
37, CLOCK TOWER-ROAD,
JAFFNA.

[சி-5830]


# மலாயன் ஓய்வூதியர்

நவாலி, மார்ச் 10

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஆகிய நாடுகளின் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் இவற்றை மூப்பது நாட்களுக்குள் வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. [இ-100]

# ஆஸ்பத்திரி பாதிப்பு

மூடப்பட்டிருந்த ஊர்காவற்றுறை வைத்தியசாலை மீண்டும் தற்காலிகமாக வேலணை மகாவித்தியாலய கட்டிடத்தில் இயங்குகிறது.

மூவர் கடமையாற்றிய இடத்தில் ஓய்வுபெற விண்ணப்பித்த ஒருவர் மட்டும் தொடர்ந்து இரவும் பகலும் கடமையாற்றுகிறார்.

இங்கு வைத்தியர்களை அனுப்ப சுகாதாரப் பணிப்பாளர் எடுத்த முயற்சிகள் இதுவரை கைகூடவில்லை. [இ - 18]

# பதுங்கு குழிகள்...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் அரச பயங்கரவாதிகளினால் மீண்டும், மீண்டும் அழிக்கப்படுகின்றன!

அந்தப் பகுதியில் போட்ட குண்டுகளினால் சுமார் 11 வீடுகள் தரைமட்டமாகியிருந்தன!

### ஆலடியில்

மீண்டும் அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி, அம்மன் கோவிலடிப் பக்கமாகச் சென்று 'ஆலடியை' அடைந்தோம். அங்கே 'மாவீரர் சிறுவர் பூங்கா'' முன் நின்று பார்த்துக்கொண்டிருந்தோம்.

அப்பொழுது திரு. நாராயணசாமி மயோன் எனக்கருகில் வந்து—

"இந்த இடத்தில் பெரிய வை–12 விமானத்தில் இருந்து மூன்று பெரிய குண்டுகள் அடுத்தடுத்துப் போட்டாங்கள். என்னுடைய வீட்டுப் பதுங்கு குழியினுள் 20 பேர் வரை இருந்தோம். நான் வாசலில் நின்றபடியே வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றேன். என்னுடைய தலைக்குமேல் பேரிரைச்சலுடன் வை — 12 விமானம் பேய்க்கொண்டிருந்தது. கொஞ்சநேரத்தில் விசில் சத்தத்துடன் குண்டு வரத் தொடங்கியதும் நான் உடனே பங்கருக்குள் பாய்ந்திட்டன். அந்தக் குண்டு என்னுடைய வீட்டுக்கு அருகில் உள்ள பரந்த வெளியில் விழுந்து வெடித்தது''.

அவர் கூறிக்கொண்டே குண்டு விழுந்த பெரிய குழியைக் காட்டினார்.

அவரது வீடு குண்டுகளின் தாக்கத்தினால் சிதறிப்போய் இருந்தது.

''பதுங்கு குழி'' - எவ்வளவுக்கு எமது மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளது என்பதை அறிந்தேன்.

[வளரும்]

# உள்ளூராட்சி நிர்வாகம் ஜூலையில் இயங்குமாம்

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் புதிய நிர்வாகங்கள் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் பகுதியில் உள்ள 10 மாநகர சபைகள், 33 நகரசபைகள் 194 பிரதேசசபைகளுக்கு நடைபெறவுள்ள தேர்தல்களில் சுமார் 87 லட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## மணமகள் தேவை

வீடியோ படம் பிடிக்கும் தொழிலாகக் கொண்டவரும், வீடியோ ஸ்தாபன உரிமையாளருமான அழகிய, படித்த மணமகனுக்கு!

படித்த, அழகிய நற்குணமுள்ள மணப்பெண் தேவை எந்த மதமும், எவ் இனமும் சம்மதம்.

சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

ஜாதகம் மற்றும் புகைப்படத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

வீ. எம். பத்மநாதர்
நுணாவில் கிழக்கு,
கல்வயல் றோட்,
சாவகச்சேரி.

[16084]


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன் கேர்ணல் ஜொனி
### (திரு விக்னேஸ்வரன் விஜயகுமார்)

தாயின் மடியில்: 21 - 05 - 1962

தாயக மண்ணில்: 13 - 03 - 1988

திதி: 10 — 03 — 1991

தமிழினத்தின் தாயகத்தை
மீட்டெடுக்க சபதமிட்டு
பல்கலைக்கழக கல்வியைத் துறந்து - நீ
போர்க்களத்தில் வீரனானாய்!
வெள்ளைக் கொடி காட்டி
வேங்கைதனைக் கூப்பிட்டு
இல்லையொரு யுத்தமென
இந்தியமே கூறிவிட்டு
துரோகம் புரிந்தனையோ - எம்
குலவிளக்கை கொன்றனையோ!

முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரம் என்னும் இடத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் நயவஞ்சகமாக கொலை செய்யப்பட்ட லெப்டினன் கேர்ணல் ஜொனியின் அந்தியேட்டி கிரியைகள் 10 - 03 - 91 ஞாயிற்றுக்கிழமை காலை 7 00 மணிக்கும், அன்னதானம் மாலை 5-00 மணிக்கும், புற்றளை அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை, சகோதரிமார்,
மைத்துனர்மார், மருமக்கள்.

சாரையடி,
புலோலி கிழக்கு,
புலோலி.

[16065]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த மாணவர்கள் பரீட்சைக்கு எங்கே தோற்றுவது?

## கல்விப் பணிப்பாளரிடம் முறையீடு

யாழ்ப்பாணம், மார்ச் 10
1990 ஆம் ஆண்டு ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தமது சொந்த இடங்களில் — பாடசாலைகளில் இருந்து விண்ணப்பித்து தற்போது இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்துக்கு வந்துள்ள பரீட்சார்த்திகள் தங்கள் நிலைகுறித்து கல்விப் பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளனர்.

அடுத்தமாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் விசேஷ ஜீ. சி. ஈ. பரீட்சைக்கு எங்கே எப்படித் தோற்றுவது என்று குழம்பிய நிலையில் இந்த பரீட்சார்த்திகள் உள்ளனர்.

இவர்களது நிலை குறித்து யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளரிடம் கேட்டபோது, ஏனைய மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மாணவ பரீட்சார்த்திகள் தங்களது விவரங்களுடன் பரீட்சைத் திணைக்கள தரவு நிரைப் படுத்தல் கிளைக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்தார்.

அந்த விண்ணப்பத்தில் தான் விண்ணப்பித்த பாடசாலை, தனது பெயர் விவரங்கள், சொந்த மாவட்டத்தில் பரீட்சை எழுத முடியாததுக்கான காரணம், மற்றும் யாழ் மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நிலையம் என்பன போன்ற விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோல் ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தாம் விண்ணப்பித்த பரீட்சை நிலையம், விண்ணப்பித்த தபால் நிலையம், பதிவுத் தபால் இலக்கம் என்பனவற்றையும் தமது சுய விவரங்களையும் எழுதி உடனடியாகப் பதிவுத்தபாலில் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார். [இ-5]

## தேசிய சேமிப்புச் சான்றிதழ்; பெற்றோர் திண்டாட்டம்

தபாற்கந்தோர்களில் இருந்து தேசிய சேமிப்புச் சான்றிதழ்களை பெற்றிருக்கும் வடபகுதி மக்கள் பலர், கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் காலம் முடிவடைந்த தமது சான்றிதழ்களை புதுப்பித்துக் கொள்ளவோ, அல்லது காசாக்கிக் கொள்ளவோ முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தபாலகங்களின் தேசிய சேமிப்பு சான்றிதழ்களை வைத்திருக்கும் சிலர் தமது வைப்புக்களுக்குரிய பணத்துக்கு தபாற்கந்தோர்களில் காசுக்கட்டளை பெற்று தேசிய சேமிப்பு வங்கிகளில் நிலையான சேமிப்புக் கணக்கில் மீண்டும் வைப்புச் செய்துள்ளார்கள்.

பல வாடிக்கையாளருக்கு இவ்வாறு மாற்று முறை இருப்பது தெரியாத காரணத்தால் தமது வைப்புகளுக்கு கிடைக்கவேண்டிய வட்டிப் பணங்களை, வீணாக இழக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

தபாற்கந்தோர் மூலம் சேமிப்புச் சான்றிதழ்களை பெற்றவர்களுக்குரிய மூலச் சான்றிதழ்கள் தலைமையகத்திலிருந்து சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களுக்கு உரிய வேளையில் வந்து சேராமையே சான்றிதழ்கள் புதுப்பிக்க அல்லது காசாக்க முடியாமைக்கு காரணம் எனவும் கூறப்பட்டது. [இ-90]

## ஆனைக்கோட்டையில் கிராமிய உற்பத்திக்குழு நிலையம்

நவாலி, மார்ச் 10
ஆனைக்கோட்டையில் கிராமிய உற்பத்திக்குழுநிலையம் ஒன்று மக்கள் முன்னணியின் மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் திரு. சங்கரினால் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக் குழுவின் தலைவர் திரு. சௌந்தரராசன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

இறந்த போராளிகளுக்காகவும், பொதுமக்களுக்காகவும் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட பின் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு ஆஞ்சநேயர் உரையாற்றினார்.

உள்ளூராட்சிப் பகுதி உத்தியோகத்தர் திரு. செல்வராசா, தமிழீழ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் ஆகியோரும் உரையாற்றினர். [இ-100]

## வசந்தபுரத்தில் கூட்டுப் பயிர்ச்செய்கை

கொழும்புத்துறை, மார்ச் 10
கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரத்தில் கூட்டுப்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக் குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் இளம்பெண்கள் ஆலயம் ஒன்றுக்குச் சொந்தமான 5 பரப்புக் காணியில் பயிர் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

பாஷையூர் உதவிப் பங்குத் தந்தை அருட் திரு. எட்மன் மைக்கல் அடிகளார் இதற்கான உதவிகளைச் செய்திருந்தார். [இ-30]

## அகதிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை - வாசிகசாலை

சாவகச்சேரி, மார்ச் 10
நுணாவில் மேற்கு வேதாந்தமடம் காணியில் அமைக்கப்பட்ட முகாம்களில் குடியேற்றப்பட்ட அகதிகளின் பிள்ளைகளுக்கு பாலர் பாடசாலை ஒன்றையும், வாசிகசாலை ஒன்றையும் அமைக்கும் பணியில் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது. [இ-31]

## 2 மாதத்தில் 34 பேர் குண்டுக்கு பலி

கிளிநொச்சி, மார்ச் 10
கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் விமானக்குண்டு வீச்சுக்களால் கடந்த இரு மாதப்பகுதியில் 34 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

பெப்ரவரி 1ஆம் திகதி முருகண்டி ஆலய பகுதி தாக்குதலில் 3 பொதுமக்களும், 4ஆம் திகதி சுதந்திர தினத்தன்று உருத்திரபுரம் கூளாவடிப பகுதியில் 11 பொதுமக்களும், 24ஆம் திகதி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகம் மீதான தாக்குதலில் ஒருவரும், தைப்பொங்கல் தினத்துக்கு முதல் நாள் கிளிநொச்சி பஸ் நிலையப் பகுதித் தாக்குதலில் 10 பொது மக்களும், கடந்த 28ஆம் திகதி போயாதினத்தில் 3ம் வாய்க்கால் அரசினர் நெற்பண்ணை தங்கு விடுதிகள் மீதான தாக்குதலில் 9 பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர். [இ-76]

## உணவு முத்திரைக்கு புளி; அதுவும் அதிக விலையாம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
உணவு முத்திரைக்குப் பொருள்கள் வாங்கப் ப. நோ. கூ. சங்கங்களுக்குச் செல்வோர் சில குறிப்பிட்ட பொருள்களை வாங்கும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

தீவுப்பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கம் ஒன்றில் உணவு முத்திரைக்கு புளியும் விநியோகிக்கப்படுகிறது என்றும் கிலோ 50 ரூபாவுக்கு அது விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிச்சந்தையில் புளியின் விலை கிலோ 15 ரூபாவாக வீழ்ச்சி அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. [இ-125]


31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. கணபதிப்பிள்ளை விநாயகம்பிள்ளை
(விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்)

தோற்றம்: 04 - 12 1932
மறைவு: 10 02 - 1991

பல இடிபாடுகளின் மத்தியில் கட்டடம் சிதைந்தாலும் கல்வி சிதையாது வளர்ந்து எமது பொன்விழா வர்ணக்கொடியை கல்வி உலகின் உயர்ந்த கோபுரத்தில் பறக்கத் தன்னால் இயன்றளவு கண்ணியமாக உழைத்த கல்லூரி ஆசிரியரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள்.
ஹாட்லிக் கல்லூரி. [16090]

IN MEMORIUM

Mr. Sanmugam Kanagaratnam
(Retd. Postmaster)

Born on: 21 - 06 - 1921
Died on: 10 - 03 - 1978

Fondly Remembered By
His Everloving Widow Mercy

Sanmuga vasa,
Church Road,
Chankanai. [16036]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெலி ஷெல் தாக்குதல்; கணவன் - மனைவி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மட்டக்களப்பு மாவட்டம் அலியார் வெட்டை, கல்வெட்டை, விளான் தோட்டம் ஆகிய பகுதிகளில் கடந்த வியாழன் அதிகாலை ஹெலியில் இருந்து பரவலாக மோட்டார் ஷெல், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் விளான் தோட்டத்தைச் சேர்ந்த க. மகேந்திரன் [28 வயது], அவரது மனைவி ஆகியோர் படுகாயமடைந்தனர். வீடு ஒன்றும் சேதமடைந்தது.

[ஓ]

## தேடுதலின்போது சூடு! ஒருவர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருகோணமலை மாவட்டம் வெருகல் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை பத்து மணியளவில் வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முட்டிச்சேனை என்ற இடத்தைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது பொ. இரத்தினசிங்கம் என்பவரைச் சுட்டுக் கொன்றதாகவும் —

தமிழர்களின் பத்துக்கும் அதிகமான வீடுகளை எரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[உ].

## போலி பாஸ்போர்ட்டுடன் 4 இலங்கையர் கைது

சென்னை, மார்ச் 10

போலி பாஸ்போர்ட்டுகளுடன் திருவனந்தபுரம் வழியாக கொழும்பு செல்ல முயன்றதாகக் கூறப்படும் நான்கு இலங்கையரை சென்னை விமான நிலையத்தில் பொலீஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

லண்டனுக்குச் செல்ல இருப்பதாகச் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர். புலன் விசாரணையின் போது அவர்கள் வைத்திருந்த பயண தஸ்தாவேஜுகள் அனைத்தும் போலியானவை என்பது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-எ]

## சாஸ்திரியின் மகன் கட்சி மாறினார்!

புதுடில்லி மார்ச் 10

இந்தியாவின் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் மகனான முன்னாள் மத்திய அமைச்சர் சுனில் சாஸ்திரி ஜனதாதள் [வி. பி.சிங்] கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்து விட்டு, சூட்டோடு சூடாக இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

கட்சியில் இருந்தும் எம். பி. பதவியில் இருந்தும் தாம் ராஜினாமாச் செய்வதாகக் கூறும் கடிதங்களை கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மைக்கும் சபாநாயகர் ரபிரேக்கும் சுனில் சாஸ்திரி நேற்று அனுப்பி வைத்தார்.

ஜனதா தள் கட்சித் தலைமைப் பீடத்தில் குழப்பநிலை இருப்பதால் தான். தான் ராஜினாமாச் செய்வதாக அவர் கூறியுள்ளார்.

## பயன் தரும் மரங்களை தறிப்பதற்குத் தடை

சாங்கேசன் துறை. மார்ச் 10

பயனுள்ள மரங்களை அனுமதி இல்லாது தறிப்பதற்கு கிராமிய உற்பத்திக்குழுக்கள் தடை விதித்துள்ளன.

இதன் மூலம் தென்னை, புளி, பலா, மா போன்ற மரங்களை அனுமதி இன்றி இனி எவரும் தறிக்க முடியாது.

அனுமதி இன்றிப் பனை தறிப்பதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

[இ-68]

## தே. எண்ணெய் கலப்படம்

தென்மராட்சி. மார்ச். 10

தண்ணீர் கலந்த தேங்காய் எண்ணெயை விடு ஒன்றில் விற்ற ஒருவர் வர்த்தக சங்க கண்காணிப்புக் குழுவிடம் சிக்கினர். சாவகச்சேரியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

[இ-117]

# வடக்கு- கிழக்குப் பகுதியிலேயே ஆசிரியர் பற்றாக்குறை அதிகம்

### அரசின் புள்ளி விவரம் தரும் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

இலங்கையிலேயே வடக்கு-கிழக்கு மாகாணத்திலேயே மிகப் பெருமளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது!

அதனால் வடக்கு-கிழக்கில் உள்ள ஆசிரியர்கள், ஏனைய மாகாணங்களில் உள்ள ஆசிரியர்களை விட அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டியுள்ளது.

இலங்கை முழுவதிலும் சராசரி 28 1 மாணவர்களுக்கும் ஓர் ஆசிரியர் உள்ளார். மேற்குமாகாணம் உட்பட ஆறு மாகாணங்களிலும் சராசரி 27 4 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் உள்ளார்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் சராசரி 36 2 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியரும், கிழக்கு மாகாணத்தில் 36.6 மாணவருக்கு ஓர் ஆசிரியரும் உள்ளனர்.

மாவட்ட ரீதியாக எடுத்தால் மட்டக்களப்பில் 42. 3 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 2 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியருமே உள்ளனர்.

இலங்கையிலேயே இந்த இரு மாவட்டங்களிலும்தான் ஆசிரியர் பற்றாக்குறை மிக உயர்ந்து காணப்படுகிறது.

ஏனைய தமிழ் மாவட்டங்களில் ஓர் ஆசிரியருக்கு உள்ள சராசரி மாணவர் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம்—35. 0
கிளிநொச்சி—39. 2
மன்னார்—37. 3
வவுனியா—37. 8
திருமலை—34. 2
அம்பாறை—33. 9

அரசாங்கத்தினால் இவ் வருட ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட சனத்தொகை சம்பந்தமான புள்ளிவிவர மதிப்பீடு ஒன்றில் இத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

[அ-3-5]

## மாவிட்டபுரத்தில் லெப். வீரா வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நேற்றுக் காலை 10-20 மணியளவில் மாவிட்டபுரம் பகுதியில் வெளியேற முயன்ற இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் வீரா [தம்பிமுத்து தர்மசிவன் — ஏறாவூர்] வீரமரணமடைந்தார்.

[உ]

## வேலைகளை குழப்பும் பொம்மர்

பொம்மர்களினால் யாழ். செயலக வேலைகளில் தடங்கல் ஏற்படுகிறது.

குறிப்பாக செயலகத்தின் மேல் மாடியில் கடமை ஆற்றும் ஊழியர்கள் பொம்மர் சத்தம் கேட்டதும் பாதுகாப்புக் கருதி கீழ் மாடிக்கு ஓடி வருகிறார்களாம்.

பொமமர்கள் அடிக்கடி பறக்கும் நாட்களில் பெரும் தாமதம் ஏற்படுவதாக ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

[இ-100]

## பதவி உயர்வு....

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அத்துலத் முதலி அவரைச் சந்தித்துப் பேசிய தூதுக்குழுவிடம் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [அ]

### மக்களுக்கு எச்சரிக்கை:

## மூளைக் காய்ச்சலுக்கு குடாநாட்டில் 10 பேர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 10

குடாநாட்டில் மூளைக் காய்ச்சல் நோய்க்கு இலக்காகி — கடந்த இரு மாதங்களில் — 10 பேருக்கு மேல் மரணமாகியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மூளைக் காய்ச்சல் நோய் குறித்து மக்கள் அவதானமாகவும் — கவனமாகவும் நடந்து கொள்ளுமாறு வைத்திய வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

நுளம்பினால் பரவும் இந்த நோயை ஆரம்ப நிலையிலேயே குணப்படுத்திவிட முடியும் என்றும் பின்வரும் அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் உடனடியாக ஆஸ்பத்திரியை நாடுமாறு அந்த வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

★ மூன்று நாட்களுக்கு மேல் தொடரும் காய்ச்சலுடன் வாந்தி.
★ உடல் வலிப்பு ஏற்படும். பொதுவாக இது குழந்தைகளிலேயே காணப்படும்.
★ மயக்க நிலை.
★ விளக்கு வெளிச்சத்தை கண்ணால் பார்க்க முடியாதிருக்கும்.

[ஒ-5]

## விளையாட்டுச் சாமான் கொண்டு வரவும் தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 10

வவுனியா நகருக்கு இப்பால் மின்சார விநியோகம் இல்லை என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். எனினும் மின்சாரத்தில் இயங்கும் வீட்டு உபகரணங்களை வட பகுதிக்கு எடுத்து வருவதற்கு கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் தடை விதித்திருக்கிறது.

மின்சாரத்தில் இயங்கும் சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாமான்களுக்குக் கூடத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏன் விளையாட்டுத் துப்பாக்கி கொண்டு வரக்கூட அனுமதி இல்லை. இந்த வகையில் போட்டோ ஸ்டாட் இயந்திரம், ரோணியோ இயந்திரம் என்பனவற்றையும் கொண்டு வர முடியாது.

அவை மட்டுமா? சத்திர சிகிச்சை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் எந்தவித உபகரணங்களையும் எடுத்து வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 30 வகையான பொருள்கள் தடை செய்யப்பட்ட பொருள்கள் பட்டியலில் அடங்குகின்றன.

[அ]

## பின் கதவால் அரசமைக்க காங்கிரஸ் முயற்சிக்காது

### இப்படிச் சொல்கிறார் ராஜீவ்

புதுடில்லி, மார்ச் 10

பின் கதவால் அரசு அமைக்க இந்திரா காங்கிரஸ் கட்சி ஒருபோதும் முயற்சிக்காது என்று ராஜீவ் காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் அரசாங்கம் ஒன்றை நாம் அமைக்க விரும்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை—

திரு. ராஜீவ் காந்தி ஜனாதிபதி வெங்கட்ராமனை நேற்று சந்தித்துப் பேசினார். [ஓ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org